விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 146 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 30 திங்கட்கிழமை (13.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்
## தென்னிலங்கை நிலைவரத்தை அறிந்து தீர்க்கமான முடிவுகளை எடுங்கள்
### இரா.சம்பந்தன் அறிவுரை

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்கும் முயற்சியில் தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள பெரும் பாலான அரசியல் கட்சிகள் இறங்கியுள்ள நிலை யில், கடந்த வாரம் 15

## அரச சொத்துக்களை விற்க மக்களாணை அவசியம்
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)
அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் செயற்பாடுகளை ஜனாதிபதித் தேர்தல் நிறை வடையும் வரை ஒத்திவைக்கு மாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட 15

## தனிமையில் வசித்து வந்த ஆணொருவர் சடலமாக மீட்பு
### புலோலி வடக்கில் சம்பவம்

(புலோலி)
புலோலி வடக்குப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த ஆணொருவர் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் கணையந்தோட்டம், புலோலி வடக்கைச் 02

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக ஆரம்பம்

### முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி நெகிழ்ந்து நிற்கிறது தாயகம்




(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் உரிமைக்குரல் மௌ னிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் வாரம் தமிழர் தாயகமெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ் டிக்கப்பட்டு வருகிறது.
இதன்போது முள்ளிவாய்க்கால் நினை வாக நினைவுக் கஞ்சி வழங்குகின்ற ஏற் பாடுகளும் ஆரம்பித்துள்ளன.
(02ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்ப் பொது வேட்பாளர்
## வவுனியாவில் கூடுகிறது தமிழரசின் மத்திய குழு

(வவுனியா)
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் உள்ள மாவட்டக்கிளைக் காரி யாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள் ளது.
இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் 02

## அரகலயவின்போது கோட்டாவை அடித்துக் கொல்லும் ஆபத்து இருந்தது
### மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி பகிரங்கம்



(கொழும்பு)
அரகலயவின்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக் கப்பட்டு கொலை செய்யப்படும் ஆபத்து நிலவியதால் அவர் இலங்கையிலி ருந்து வெளியேற உதவினேன் என மாலைதீவின்முன்னாள்ஜனாதி பதி முகமட் நசீட் தெரிவித் 15

## திருமலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு நீதிமன்றத் தடை
### இரு பெண்கள் பொலிஸாரால் கைது

(திருகோணமலை)
திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நீதிமன்றத் தடையை மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய பெண்கள் இருவர் நேற்று வலுக்கட்டாயமாக சம்பூர் பொலிஸாரி னால் கைது செய்யப் 04

### சிங்கள மக்களும் ஏற்கக்கூடியதான பொறிமுறையே அவசியம்
சர்வதேசத்தால் அது முடியாது என்கிறார் அலி சப்ரி
6ஆம் பக்கம் பார்க்க

### நாகை - காங்கேசன்துறை கப்பல் சேவை 17ஆம் திகதி
(கொழும்பு)
நாகை - காங்கேசன்துறை கப்பல் சேவை தவிர்க்க முடியாத காரணத் தால் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கப்பல் சேவை நிறுவனம் அறிவித் துள்ளது. 15

### பல்கலைக்கழக ஊழியர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்
(யாழ்ப்பாணம்)
நாடு முழுவதிலுமுள்ள 02

### சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகினார் மைத்திரி

14ஆம் பக்கம் பார்க்க

### ஆயுத ரீதியிலான ஆத்ம பலத்தை இழந்தாலும்
## விடுதலைப் பயணத்தின் வீரியத்தை இழக்கவில்லை
### திருகோணமலையில் சிறீதரன் எம்.பி



(திருகோணமலை)
விடுதலை வேண்டிப் போராடும் இனமொன்றின் வேட்கைக்கு, அந்த இனம் எதிர்கொள்ள நேரிடும் இழப்புகள் ஒருபோதும் தடையாக அமையாது 15

### தமிழ்ப் பொது வேட்பாளர்
## அரசியல் கட்சிகளுடன் பேசுவதற்கு செயற்குழு தயார்

(யாழ்ப்பாணம்)
தமிழ் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகளு டனான பேச்சுக்களை விரை வில் ஆரம்பிப்பதற்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதி களை உள்ளடக்கிய செயற் குழு திட்டமிட்டுள்ளது.
இக்குழுவானது அடுத்து வரும் நாட்களில் அனைத்து அரசியல் கட்சிகளை யும் சந்தித்து உரை 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

இதன் முதற்கட்டமாக நேற்று முள்ளிய வளை பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டது.

புலம்பெயர் மற்றும் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த கஞ்சி பரிமாறும் நிகழ்வு நடை பெற்றது.

இதன்போது அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு முள் ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற செயற் பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவ னின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை தொகுதி கிளையினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் நேற்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூ பியில் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் முன்னெடுக் கப்பட்டது.

இதன்பொழுது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து முன்னாள் போராளியும் முன் னாள் உபதவிசாளருமான விஜயனால் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு தொடர்ச் சியாக ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்ட தோடு முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழினப்படு கொலையை அடையாளப்படுத்தும் முள் ளிவாய்க்கால் நினைவு ஊர்தி யாழ் நகரிலிருந்து ஆரம்பமானது.

இதன்பொழுது முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றினை உள்ளடக்கிய துண்டுபிரசுரமும் வழங்கிவைக்கப்பட்டது.

இதேவேளை முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரத்தை முன்னிட்டு இல ங்கை தமிழரசு கட்சியினரால் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வு நெல்லியடி பேருந்து நிலையத்தின் அருகில் இலங்கை தமிழ ரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு பயணிகள், வர்த்தகர்கள், பொதுமக்களு க்கு வழங்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சி முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், தமிழரசுக் கட்சி பருத்தித்துறை தொகுதி நிர்வாகிகளான பிரசாத், தயாப ரன், உட்பட தமிழரசு கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை சாவகச்சேரி தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சிறுமி ஒருவருக்கு நினைவுக் கஞ்சி வழங்கி நிகழ்வை தொடக்கி வைத்திருந்தார்.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமை யில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சிவஞானம், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் தவிசாளர் சிவமங்கை, சாவ கச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டி ருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10.30 க்கு முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் இடம்பெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர் தவத்திரு அகத்தியர் அடிகளார் 15 ஆவது இனப்படுகொலை நினைவேந்தலுக்கான அழைப்பினை விடுத்துள்ளார்.

தமிழினத்தின் அடக்கு முறைக்கு எதிரான விடுதலை போராட்டத்தின் ஆயுதப் போராட்ட பரிமாணத்தை மௌனிக்கச் செய்து 15 ஆண்டுகள் நிறைவடை வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணி ஒலி எழுப்பி இயலுமான வரை முள் ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறி நினைவுகூரு மாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதியில் சிரமதானப் பணிகளும் முன்னெடுக் கப்பட்டன. (ந-7,10)

## தனிமையில்...

சேர்ந்த நமசிவாயம் இராதாகிருஸ்ணன் (வயது-64) அடையாளம் காணப் பட்டுள்ளார்.

குறித்தநபர் தனிமையில் வசித்து வந்த வேளை அவரது வீட்டில் உயிரி ழந்த நிலையில் சடலமாக காணப்படுவ தாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடை க்கப் பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை பொலி ஸார் சடலத்தினை மீட்டுள்ளனர்.

குறித்த மரணம் தொடர்பில் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவ ராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ந-7,10,60)


இங்கிலண்ட் கட்டர் இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
இங்கிலண்ட் பேப்பர் கட்டர்
இயந்திரம் (36")
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : (இ)
076 097 3121

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும்
கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
[illegible] திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


## வவுனியாவில்...

தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக நிகழ்ச்சி நிரலிடப் பட்டுள்ளது.

முன்னதாக, 'மக்கள் மனு' கலந்துரை யாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை.சோ.சேனாதிராஜா, சர வணபவன் மற்றும் கிழக்கு மாகாண அங்கத்தவர்களான அரியநேத்திரன், ஸ்ரீநேசன் போன்றவர்கள் பங்கேற்றிருந் தனர். இவர்கள் கொள்கை அளவில் பொதுவேட்பாளர் விடயத்தினை ஆதரித் திருந்ததோடு கட்சி ரீதியாகத் தீர்மானம் எடுப்பதற்கு 14 நாட்கள் கால அவகாசம் கோரியிருந்தனர்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிறீதரன் தவிர ஏனைய பாராளுமன்ற உறுப்பினர் களான சுமந்திரன், சாணக்கியன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பொது வேட் பாளர் விடயத்திற்கு எதிரான நிலைப் பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். கலை யரசன் கட்சி எந்த முடிவினை எடுக்கின் றதோ அதற்கு கட்டுப்படுவதாக தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## பல்கலைக்கழக...

அரச பல்கலைக்கழகங்களில் நடை பெற்றுவரும் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தின் ஒரு பகுதியாக இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமும் அதனைத் தொடர்ந்து மாணவர் ஒன் றியத்தினருடன் இணைந்து ஊடக சந் திப்பு ஒன்றும் நடைபெறவுள்ளது.(ந-7,10)

## அரசியல்...

யாடல்களை முன்னெடுப்பதற்கு தீர்மானித் துள்ளது.

குறிப்பாக, பொது வேட்பாளர் விடயத் தில் எதிர்மறையான நிலைப்பாட்டை உடைய தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி மற்றும் மக்கள் பிரதிநிதிகளையும் நேரில் சந்திப்பதற்கு அக்குழு திட்டமிட்டு ள்ளது.

இவ்வாறு அரசியல் கட்சிகளுடனான உரையாடல்களை அடுத்து பொதுக் கட்ட மைப்பொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதோடு, பொதுக்கட்டமைப்பின் கீழாகப் பத்து உப குழுக்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

இந்த உபகுழுக்கள் அரசியல் கட்சி, சின்னம், வேட்பாளர், தேர்தல் விஞ்ஞா பனம், நிதி, பிரசாரம் உள்ளிட்ட விடயங் களையும் கையாளும் வகையில் செயற் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ந-7,10)




முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு
வன்னிவிளாங்குளம்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
ஆலய வருடாந்த பொங்கல் விழா
17.05.2024 வெள்ளிக்கிழமை

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

அம்பிகை அடியார்களே
வன்னி விளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந் தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் குரோதி வருடம் வைகாசித் திங்கள் 04ம் நாள் (17.05.2024) வெள்ளிக் கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேக மும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 09.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமை போல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:-
1) பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2) பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3) பொங்கல் தினந்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 15.05.2024 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப் பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல்வேண்டும்

அனைவரையும் வருக வருகவென அழைத்து நிற்கின்றோம்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தி[illegible] சபை,
வன்னிவிளாங்குளம், [illegible]
(C-0350)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவதைக்கு எதிர்ப்பு தெரிவித்து

# நல்லை ஆதீனம் முன்பாக போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**பசுவதை தடைச்சட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தி யாழ்.நல்லை ஆதீனம் முன்பாக நேற்றுக் காலை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



பசுக்கள், இடபங்களை பாது காக்கும் சகல சமயங்களின் ஏற்பாட்டில் இலங்கை சிவ சேனைகளின் தலைவர் மற வன்புலவு க.சச்சிதானந்தம் தலைமையில் குறித்த போரா ட்டம் இடம்பெற்றது.

இலங்கையில் பசுவதைச் சட்டத்திற்குரிய பூரண ஆதரவு தெரிவித்து "இலங்கை பசுவதை நிறுத்தப்பட்ட பஞ்சசீலங்களைப் பேணும் புண்ணிய பூமியா கட்டும்" எனும் தொனியில் போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் நிறைவேற்று, நிறைவேற்று பசுவதைத் தடைச்சட்டத்தை நிறை வேற்று, வெட்டாதே வெட்டாதே கன்று டன் பசுவை வெட்டாதே போன்ற வாசகங்கள் எழுதிய பதாகை களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ்.மத்திய ஸ்தான நாக விகாரை விகாராதிபதி, விமல ரத்ன தேரர், இந்து சமய பேர வையின் தலைவர் சக்தி கிரீ வன் மற்றும் சிவசேனைத் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழில் அண்மையில் பொலி ஸாரால் இரண்டு கொள்கல ன்கள் முற்றுகையிடப்பட்டு பசுக் கள் உயிருடனும் இறந்த நிலை யிலும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## சட்டவிரோதமாக கடத்தப்பட்ட சுமார் ரூ.30 லட்சம் பெறுமதியான பாலைமரக்குற்றிகள் மீட்பு



(சாவகச்சேரி)

அனுமதியின்றி சட்டவிரோ தமாக டிப்பர் வாகனத்தில் கட த்தப்பட்ட சுமார் முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பாலை மரக் குற்றிகள் நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்கு வரத்துப் பொலிஸ் உத்தியோக த்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட் டுள்ளது.

புத்தூர் வீதி ஊடாக மண லுக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட சுமார் 150 மரக்குற்றிகளே சாவ கச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் வைத்து பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச் சேரிப் பொலிஸார் முன்னெடு த்து வருவதுடன் தப்பி ஓடிய சந்தேக நபர்களை கைது செய் வதற்கான நடவடிக்கைகளை யும் முன்னெடுத்து வருகின் றனர். (நி-6-30-33)

## துன்னாலை ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலய கொடியேற்றம் இன்று

(கரணவாய்)

துன்னாலை அல்லையம் பதி ஸ்ரீசிவசுப்பிரமணியர் தேவஸ்தான வருடாந்த மகோ ற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியே ற்றத்துடன் ஆரம்பமாகி தொட ர்ந்து பத்து தினங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு வேட்டை உற்சவமும் இரவு சப்பற உற்சவம், 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இரதோற்சவமும், மறு நாள் புதன்கிழமை காலை தீர்த்த உற்சவம் இடம்பெற்று அன்று மாலை 6 மணிக்கு கொடியி றக்க வைபவம் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6-60)


## சந்நிதியிலிருந்து ஆரம்பமான கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல் வச் சந்நிதியான் ஆலயத்திலி ருந்து கதிர்காமம் நோக்கிய முருக பக்தர்களின் பாதயாத் திரை நேற்று முன்தினம் ஆர ம்பமாகியுள்ளது.

அதன் முதல் நிகழ்வாக செல் வச்சந்நிதியான் ஆலயத்தில் சிறப்பு பூசைகள் நடைபெற்று, சந்நிதியான் ஆலய பூசகரால் வேல் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பக்தர்கள் யாத் திரையை முன்னெடுத்து இருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6-33-60)



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழாவின் நிகழ்வுகள் இரண்டு நாட்கள் இடம்பெற்றன. முதல்நாள் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.கல்வியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் நூற்றாண்டு மலர் வெளியீடும், இராவணேசன் கூத்தளிக்கை என்பன இடம்பெற்றன. (படங்கள் : சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சென்னையின் 'சிங்கம்' சிமர்ஜித் சிங்

## ● பிளே ஓப் வாய்ப்பை தக்கவைத்து பூரிப்பு
## ● உச்சஸ்தாயிலிருந்து விழுகிறது ராஜஸ்தான்



சிமர்ஜீத் சிங் (3 விக்.,) கைகொடுக்க, சென்னை அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் சென்னை, ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

ஆடுகளம் மந்தமாக இருந்ததால், ராஜஸ்தான் அணி ஓட்டம் சேர்க்க தடுமாறியது. சென்னை தரப்பில் சிமர்ஜீத் சிங் மிரட்டினார். இவரது "வேகத்தில்" ஜெய்ஸ்வால் (24), ஜோஸ் பட்லர் (21), சஞ்சு சாம்சன் (15) ஆட்டமிழந்தனர். தனி நபராக போராடிய ரியான் பராக் அவ்வப்போது பவுண்டரி அடித்தார். தேஷ்பாண்டே ஓவரில் துருவ் ஜுரல் (28), சுபம் துபே (0) வெளியேறினர்.

**ஜடேஜா "அவுட்" சர்ச்சை**

அவேஷ் கான் பந்தை (15.5 ஓவர்) "தேர்ட் மேன்" திசையில் அடித்த ஜடேஜா முதல் ஓட்டம் எடுத்தார். பின் இரண்டாவது ஓட்டத்துக்கு ஆசைப்பட்டு பாதி தூரம் ஓடி வந்தார். மறுமுனையில் ருதுராஜ் மறுக்க, மீண்டும் "கிரீசிற்கு" திரும்ப முற்பட்டார். அப்போது கீப்பர் சாம்சன் பந்தை "த்ரோ" செய்தார். ஜடேஜாவின் முதுகு பகுதியில் பந்துபட, ரன் அவுட் செய்ய முடியவில்லை. இதையடுத்து களத்தடுப்புக்கு இடையூறு செய்த விதிப்படி சாம்சன் "அப்பீல்" செய்தார். மூன்றாவது நடுவரிடம் கேட்கப்பட்டது. "ரீப்ளே"வில் பந்து வருவதை கணித்த ஜடேஜா, "ஸ்டம்ப்சை" மறைக்கும் வகையில் திசையை மாற்றி ஓடியது தெரிய வர, "அவுட்" கொடுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த ஜடேஜா, களத்தில் இருந்த நடுவர்களிடம் விவாதித்துவிட்டு, விரக்தியுடன் வெளியேறினார்.

20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை மட்டும் எடுத்தது.


பராக் (47) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ருதுராஜ் அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு ரச்சின் ரவிந்திரா அதிரடி ஆரம்பம் கொடுத்தார். போல்ட் ஓவரில் வரிசையாக ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார். அஷ்வின் வலையில் ரச்சின் (27) சிக்கினார். சகால் பந்தில் மிட்சல் (22) வீழ்ந்தார். மொயீன் அலி (10) நிலைக்கவில்லை. அஷ்வின் ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்த ஷிவம் துபே, 18 ஓட்டங்கள் எடுத்தார். ஜடேஜா (5) சர்ச்சைக்குரிய முறையில் அவுடாக, 16 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்கள் எடுத்து தவித்தது.பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட், அணியை கரை சேர்த்தார். போல்ட் ஓவரில் சமீர் ரிஸ்வி வரிசையாக இரு பவுண்டரி அடிக்க, சென்னை அணி 18.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 145 ரன் எடுத்து சுலப வெற்றி பெற்றது. "பிளே-ஆப்" வாய்ப்பையும் தக்க வைத்துக் கொண்டது. ருதுராஜ் (42), ரிஸ்வி (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# சிம்பாப்வே ஆறுதல் வெற்றி

## கிண்ணம் வென்றது பங்களாதேஷ்



5ஆவது "ரி20" போட்டியில் அசத்திய சிம்பாப்வே அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. பங்களாதேஷ் அணி 4-1 என தொடரை கைப்பற்றி கிண்ணம் வென்றது.

பங்களாதேஷ் சென்றுள்ள சிம்பாப்வே அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்றது.

முதல் நான்கு போட்டியில் பங்களாதேஷ் வென்றிருந்த நிலையில், ஐந்தாவது போட்டி டாக்காவில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

பங்களாதேஷ் அணிக்கு மஹ்முதுல்லா (54), அணித் தலைவர் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (36), சாகிப் அல் ஹசன் (21), ஜாகர் அலி (24*) கைகொடுத்தனர். வங்கதேச அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்கள் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய சிம்பாப்வே அணிக்கு பிரையன் பென்னெட் (70), அணித் தலைவர் சிக்கந்தர் ராஜா (72*) அரைசதம் கடந்து நம்பிக்கை அளித்தனர். சிம்பாப்வே அணி 18.3 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 158 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

# டில்லியை வீழ்த்தியது பெங்களூரு

துடுப்பாட்டம், பந்துவீச்சில் அசத்திய பெங்களூரு அணி 47 ரன் வித்தியாசத்தில் டில்லியை வீழ்த்தியது.

**படிதர் அபாரம்**

பெங்களூரு அணிக்கு அணித் தலைவர் டுபிளசி (6) ஏமாற்றினார். ஹோலி 27 ஓட்டங்கள் விளாசினார். முகேஷ் குமார் வீசிய 5வது ஓவரில் 3 பவுண்டரி விரட்டிய ரஜத் படிதர், அக்சர் படேல், குல்தீப் யாதவ் பந்துகளை சிக்சருக்கு அனுப்பினார். குல்தீப் பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட வில் ஜாக்ஸ், கலீல் அகமது, ராசிக் சலாம் ஓவரில் தலா ஒரு பவுண்டரி அடித்தார். அபாரமாக ஆடிய படிதர், 29 பந்தில் அரைசதம் எட்டினார். இவர் 32 பந்தில் 52 ஓட்டங்கள் (3 சிக்சர், 3 பவுண்டரி) எடுத்து ஆட்டமிழந்தார். வில் ஜாக்ஸ் (41) ஓரளவு கைகொடுத்தார்.

20 ஓவரில் பெங்களூரு அணி 9 விக்கெட்டுக்கு 187 ஓட்டங்கள் எடுத்தது. கிரீன் (32) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**அக்சர் ஆறுதல்**

சவாலான இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு வோர்னர் (1), அபிஷேக் போரெல் (2) ஏமாற்றினர். பிரேசர்-மெக்குர்க் (21), ஷாய் ஹோப் (29) ஆறுதல் கொடுத்தனர். குமார் குஷாக்ரா (2), டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (3), ராசிக் சலாம் (10) சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அக்சர் படேல் (57) அரைசதம் கடந்து நம்பிக்கை தந்தார். முகேஷ் குமார் (3), குல்தீப் யாதவ் (6) நிலைக்கவில்லை.

டில்லி அணி 19.1 ஓவர்களில் 140 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

# திருமலையில்...

பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

சேனையூர் பகுதியில் நேற்று மதியம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்றபோது அங்கு வந்த பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவைக் காட்டி நிகழ்வை தடுக்க முற்பட்டனர்.


இதன்போது அங்கு கூடியிருந்த பொதுமக்கள் நாங்கள் வேறு யாரையும் நினைவுகூரவில்லை. உயிரிழந்த பொது மக்களுக்காகவே இதனைச் செய்கின்றோம் எனக் கூறி பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு நீதிமன்ற தடை உத்தரவையும் வாங்க மறுத்ததுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியை பொதுமக்களுக்கு பரிமாறி முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்திருந்தனர்.

இந்நிலையிலேயே நீதிமன்ற உத்தரவை மீறி கஞ்சி காய்ச்சி கொடுத்த காரணத்திக்காக இரண்டு பெண்களை சம்பூர் பொலிஸார் நேற்றிரவு 8.45 மணியளவில் கைது செய்துள்ளனர். (ந-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025

## குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும்



**குரு பகவானை ராசிநாதனாகக் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!**

நீங்கள் பழைமையான விடயங்களில் அதிக நம்பிக்கை கொண்டவர்கள். கிரகநிலை: பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது தொழில் ஸ்தானம் - விரைய ஸ்தானம் - தனவாக்கு ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஶ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத் திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுபநாமயோகமும் - பவ கரணமும் - சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 5.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

**தனுசு ராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்:** குருப் பெயர்ச்சியில் குரு பகவான் உங்களின் தேகத்தை பொலிவடையச் செய்வார். இந்த குரு பெயர்ச்சியால் குடும்பத்தில் சூழ்ந்திருந்த பிரச்சினைகள் விலகி தெளிவு பிறக்கும். குறிக்கோளை சுலபமாக அடைவீர்கள். பணக்கஷ்டம் நீங்கும். பொதுக்காரியங்களில் உங்கள் நேரத்தை செலவிடுவீர்கள். தாய் வழி உறவினர்களிடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேர்ந்து உங்களை மகிழ்ச்சிப்படுத்தும். சமுதாயத்தில் உயர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு உண்டாகும். போட்டியாளர்களின் சதிகளை தவிடு பொடியாக்கி விடுவீர்கள். அதேநேரம் அவ்வப்போது உடல் உபாதைகள் தோன்றி மறையும். குறிப்பாக வயிறு. தோல் சம்பந்தப்பட்ட உபாதைகள் உண்டா லாம். அதனால் உடல் நலத்தில் கவனமாக இருக்கவும். மற்றபடி உங்கள் திறமை க்குத் தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

சட்டப் பிரச்சினைகள் பெரிதாகாமல் பார்த்துக்கொள்வீர்கள். வம்பு, வழக்குகளை விட்டுக்கொடுத்து நடந்து கொண்டு முடித்துக்கொள்வீர்கள். உங்களைப் பற்றி வீண் புரளி சொல்பவர்களிடமிருந்து விலகி இருப்பீர்கள். உங்களின் நுண்ணிய அறிவால் புதிய ஆற்றலைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் விருந்து, கேளிக்கைகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். பொருளாதாரத்தில் சிறப்பான வளர்ச்சியை அடைவீர்கள். தனிப்பட்ட முறையிலும், கூட்டுத் தொழிலிலும் நல்ல நிலை ஏற்படும். உங்களின் தெய்வ நம்பிக்கை பலப்படும். பிறரைச் சார்ந்து செய்து வந்த காரியங்களை தனித்துச் செய்து பெருமையடைவீர்கள். போட்டியாளர்களை சமாளிப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் கவனமாக செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள்.

குடும்பத்தில் குதூகலம் நிறையும். உற்றார், உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொண்டு அவர்களின் ஆதரவைத் தக்க வைத்துக்கொள்வீர்கள். உங்களின் செல்வாக்கு உயரும். வீட்டைப் பழுது பார்ப்பது போன்ற காரியங்களை செய்ய வேண்டாம். பங்குச் சந்தை வேறுதொழிற் துறைகளில் அதிக வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. அவசியமில்லாத பயணங்களைத் தவிர்க்கவும். அதோடு முக்கிய முடிவுகளை உயர்ந்தோரின் ஆலோசனைகளைக் கேட்டு எடுக்கவும். உடல் ஆரோக்கியம், மனநலம் சீராக யோகா, பிராணாயாமம் போன்றவற்றைச் செய்வீர்கள்.

உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள். ஆனால் சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் அனைத்து இடையூறுகளையும் தாண்டி வந்து விடுவீர்கள். சிலருக்கு அலுவலக ரீதியாக வெளியூர் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றங்கள் உண்டாகலாம். மற்றபடி முயற்சி மேற்கொண்டால்தான் உங்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். வியாபாரிகள் புதிய முயற்சிகளை மேற்கொண்டு பலன் அடைவீர்கள். அதே நேரம் கூட்டாளிகளிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்ளவும். மற்றபடி கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சாதகமாக முடியும். புதிய திட்டங்களை செயற்படுத்தி வாடிக்கையாளர்களின் கவனத்தைக் கவர்வீர்கள்.

அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். பயணங்களால் நன்மைகள் உண்டாகும். உங்களின் அனைத்து வேலைகளையும் சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். அதேநேரம் தொண்டர்கள் உங்களை சிறிது அலட்சியப்படுத்துவார்கள். எனவே அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும். கலைத்துறையினருக்கு அதிக முயற்சிகளுக்குப் பிறகே புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். ரசிகர்களின் பாராமுகத்தால் வேதனை அடைவீர்கள். சக கலைஞர்கள் உங்களுக்கு உதவ மாட்டார்கள். எனவே அவர்களிடம் எந்தக் கோரிக்கையையும் எடுத்துச் செல்ல வேண்டாம். மற்றபடி பொறுப்புடனும், பொறுமையாகவும் நடந்துகொண்டு செயற்படவும்.




பெண்மணிகள் இந்த குருப் பெயர்ச்சியால் கூடுதல் வருமானத்தைக் காண்பீர்கள். ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவரிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொண்டு அவரின் அன்பைப் பெறவும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடத்த வாய்ப்பு உண்டாகும். மாணவமணிகள் படிப்பில் முழுமையான கவனத்தைச் செலுத்தினால் நல்ல மதிப்பெண்களைப் பெறலாம். எனவே படிப்பைத் தவிர வேறு எதையும் நினைக்க வேண்டாம்.

மூலம்: இந்த குரு பெயர்ச்சியால் வியாபாரிகளுக்கு லாபம் உண்டாகும். பண விடயங்களை கையாளுவதில் கவனம் தேவை. உடனிருப்பவர்களுடன் முக்கியமான விஷயத்தை பகிர்வதில் கவனம் தேவை. விற்பனையில் இலாபத்தை ஈட்டுவீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும். பெற்றோர்களின் சொற்படி நடப்பது நன்மை தரும். பொன்பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எந்த ஒரு விடயத்திலும் அவசரம் காட்ட வேண்டாம். நன்மை தீமைகள் பற்றி ஆலோசித்து முடிவு எடுப்பது அவசியம். காரிய அனுகூலம் உண்டாகும். காரிய தடைதாமதம் ஏற்படும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும்.

**பூராடம்:** இந்த குருப் பெயர்ச்சியால் மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும். தொழில் வியாபாரம் மந்தமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பணவரத்து இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களிடம் இருந்து மனம் நோகும்படியான வார்த்தைகள் வெளிப்படலாம். அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பற்றிய கவலை உண்டாகும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியை தரும்.

**உத்திராடம் 1ம் பாதம்:** இந்த குரு பெயர்ச்சியால் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தெய்வ வழிபாடுகள் உங்களுக்கு வெற்றி உண்டாகும். பொறுப்புகள் வாய்ந்த பதவிகள் கிடைக்கும். மேலிடத்தின் உத்தரவுகளை கேட்டு நடந்தால் முன்னேற்றம் காணும் காலம். நண்பர்கள் அனுகூலம் கிடைக்கும். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்கள் உண்மையாக இருப்பார்கள். அதிக ஆர்வத்துடன் வேலை செய்வார்கள். முன்னேற்றம் காணப்படும். வியாபாரிகளுக்கு ஓடர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஆனாலும் லாபம் ஏற்படும்.

**பரிகாரம்:** முருகனுக்கு தீபம் ஏற்றி வழிபடுவதும் கஷ்டங்களை போக்கி மனதில் நிம்மதியை தரும் ; சிறப்பு பரிகாரம்: வியாழக்கிழமை தோறும் தட்ஷிணாமூர்த்திக்கு கொண்டைக் கடலை மாலை சாத்தி வழிபடவும் ; **சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் சத் குருவே நம" என்ற மந்திரத்தை தினமும் 12 முறை சொல்லவும் ;

**அதிஷ்ட எண்கள்:** 1, 3, 9 ;

**அதிஷ்ட ஹோரைகள்:** சூரியன், செவ்வாய், குரு ;

**அதிஷ்ட திசைகள்:** கிழக்கு, தெற்கு

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வியாழன்

(தொடரும்)

# இராசிபலன்

**13.05.2024**
**சித்திரை 30, திங்கட்கிழமை**
**சஷ்டி முழுவதும்**

**புநர்பூசம் பிற்பகல் 2.40 மணிவரை**
**சுபநேரம் 11-54-1.24 மணிவரை**
**இராகுகாலம் 7.24-8.54 மணிவரை**

**சஷ்டி விரதம்**
**சந்திராஷ்டமம் - விசாகம், அனுசம்**


**வளவன்**




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர்களின் ஆதரவால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.




சுப நிகழ்வுகள் புதியவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.





வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.




எப்படி நடக்குமோ என்று நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.





எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




புதிய முயற்சிகள் கைகூடும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.





தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.





குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனச்சோர்வுகள் ஏற்படலாம்.




நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.




கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக போட்டிகள் மாறும்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

மற்றவர் கருத்துக்களைத் தவறாகப்புரிந்து கொள்ளாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களும் ஏற்கக் கூடியதான நல்லிணக்க பொறிமுறை அவசியம்

## எனவே சர்வதேசத்தினால் அதனை உருவாக்க முடியாது என்கிறார் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

**இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பினை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**



கடந்த செவ்வாயன்று பாராளுமன்ற உரையில் எம்.ஏ.சுமந்திரன், உள்ளக பொறிமுறையின் மூலம் ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்றும், ரோம் சட்டத்திற்கமைய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார். எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் யுத்தம் நிறைவுப்பெற்று 15 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் பொறுப்பு கூறல் விடயத்தில் அரசாங்கத்தின் கடப்பாடு தொடர்ந்தும் விமர்சனத்துக்குட்பட்டதாகவே காணப்படுகிறது. இது தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெளிவுபடுத்துகையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. காணாமல் போனோர் அலுவலகத்தில் சென்று தமது உறவுகளை இழந்த மக்கள் அவர்களை தேடித் தருமாறு கோருகின்றனர். அதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். ஆனால் அந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பினை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது.

மாறாக அதனை சர்வதேசத்துக்கு வழங்கினால் உள்நாட்டவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

நல்லிணக்க பொறிமுறையானது தமிழ் மக்கள் மாத்திரமன்றி சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இதனை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது. அது நடைமுறையில் யதார்த்தமானதல்ல.

எனவே இவ் விடயத்தில் பக்கச் சார்பாக அன்றி நடுநிலையான தீர்வினை வழங்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# 8 வருடங்களின் பின் அதிகரித்த வெப்பநிலை

## பேராதனை பல்கலை புவியியல் பேராசிரியர்

(கொழும்பு)

8 வருடங்களின் பின்னர் இந்த ஆண்டு நாட்டின் வெப்பநிலை வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் திலக் விஜயதுங்க பண்டார தெரிவித்துள்ளார்.

பல்வேறு காலநிலை காரணங்களால் இந்த ஆண்டு வெப்பம் அதிகரித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த வாரம் சராசரியாக 39 பாகை செல்சியஸ் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு தான் இவ்வளவு அதிக வெப்பநிலை பதிவானது. இந்த நாட்டில் சராசரி வெப்பநிலை 27 முதல் 29 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என்றும் பேராசிரியர் திலக் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

அதன்படி, இதனை சமாளிக்க மக்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# பொதுத்தேர்தல் முடியும் வரை அரசியல்வாதிகளை நிகழ்வுகளுக்கு அழைப்பதை தவிருங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள மாதங்களில் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அரசியல்வாதிகளை அழைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம் ஒன்றின் மூலம் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் பெயரில் அரசியல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக்கூடும் என பவ்ரல் அமைப்பினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

மேலும், பிரசார நடவடிக்கைகள் ஆளுங்கட்சிக்கு சார்பானதாக அமைந்துவிடும் எனவும் குறித்த அமைப்பு கூறியிருந்தது.

இதற்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்துக்கு கடிதம் மூலம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தொலைபேசி ஊடான தொந்தரவுக்கு சுமார் ஒரு மில்லியன் ரூபாய் அபராதம்

## சட்டமூலம் சபையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)



தொலைபேசி ஊடாக பொய்யான தகவல்களைப் பகிர்ந்து பொதுமக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துவோருக்கு எதிராக இலங்கை தொலைத்தொடர்பு (திருத்த) சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலமானது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளுதல், எந்தவொரு தொலைத் தொடர்பு அதிகாரி அல்லது எந்தவொரு நபருக்கும் எரிச்சல், சிரமம் மற்றும் தேவையில்லாத கவலை போன்ற குற்றம் நிரூபிக்கப்பட்டால் இதுபோன்ற குற்றங்களைச் செய்யும் நபரின் தொலைபேசி இணைப்புகளைத் துண்டிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேண்டுமென்றே தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளும் அல்லது பொது அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் நோக்கத்துடன் செய்திகளை அனுப்பும் ஒவ்வொரு நபருக்கும் ஒரு மில்லியன் ரூபாய் அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

தொடர்ந்து குற்றம் நடந்தால், குற்றம் செய்தவருக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதுடன் தொலைத் தொடர்பு அதிகாரகளிடம் தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

தவறான தகவல்களை அனுப்பும் தொலைத்தொடர்பு கருவிகள் மாஜிஸ்திரேட்டின் உத்தரவு மூலம் அரசுக்கு பறிமுதல் செய்யப்படும்.

இலங்கையின் கடற்பரப்பிற்குள் அமைக்கப்பட்டுள்ள நீர் மூழ்கிக் கப்பல் கேபிள்களை கண்காணிக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் பாதுகாக்கவும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவிற்கு சட்டமூலத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் இலங்கை விஜயம்

## முள்ளிவாய்க்கால் நினவேந்தலிலும் பங்கேற்பார்




(கொழும்பு)

மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், 16 ஆம் திகதி வியாழக்கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் 18ஆம் திகதி முள்ளி வாய்க்கால் நினை வேந்தல் நிகழ்விலும் கலந்து கொள்ள வுள்ளார். (நி-6)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வவுனியாவில் அனுஷ்டிப்பு



(குருமணகாடு)

வவுனியாவில் முள்ளி வாய்கால் நினைவேந்தலின் முதல் நாள் நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா, வாடி வீடு மண்டபத்தில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற் பாட்டில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது, முள்ளி வாய்கால் இறுதி யுத்தத்தின் போதும், போரின் போதும் கொல்லப்பட்ட பொது மக்கள் நினைவாக போராளி குடும் பத்தினரால் பொதுச் சுடர் ஏற்பட்டதுடன், மலர் தூவி அஞ்சலி நிகழ்வும் இடம் பெற்றது.

இதன்போது முள்ளி வாய்க்கால் நினைவாக நினைவுப் பாடல் அறிமுகம் செய்யப்பட்டதுடன், பாட சாலை மாணவர்கள் 60 பேருக்கு கற்றல் உபகரண ங்களும் வழங்கி வைக்கப்ப ட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், காணா மல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா, முச் சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், தமிழ விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், முன்னாள் போராளிகள், போராளிகள் குடும்பங்கள் எனப் பலரும் கலந்து கொண டனர்.

அதேவேளை வவுனியா மாவட்ட காணமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளால் வவுனியா நகரசபை பொங்கு தமிழ் நினைவுத்தூபி முன் பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டமை குறிப்பிட த்தக்கது. (நி-6-250)

# மன்னார் திருக்கேதீஸ்வர கொடியேற்றம் இன்று



(மன்னார்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மன் னார் திருக்கே தீஸ்வர ஆலய த்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று திங்கட் கிழமை மு.ப 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலய வரு டாந்த மகோற்சவப் பெருவிழா வுக்காக கொடிச்சீலை நேற்று யாழில் இருந்து திருக்கேதீஸ் வரம் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கென்னடி வீதி யில் உள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச் சீலை எடுத்து செல்லப்பட்டு திரு நெல்வேலி வெள்ளைப்பிள்ளை யார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடு கள் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு கொடிச்சீலை வாக னத்தில் எடுத்து செல்லப்பட் டது.

இந் நிலையில் 40 வரு டங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் முதல் மீண்டும் யாழில் இருந்து திருக்கேதீஸ்வர ஆல யத்திற்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கி வைக் கப்பட்டு வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (நி-6)

# யாழில் பணமோசடியில் ஈடுபட்ட தென்னிலங்கைவாசி கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக யாழில் பண மோச டியில் ஈடுபட்ட தென்னிலங்கை அரசியல் கட்சி ஒன்றின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்ய ப்பட்டுள்ளார்.யாழைச் சேர்ந்த வரை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பெற்று மோசடி செய்துள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட தரப்பினரால் யாழ்.மாவட்ட குற்ற த்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து , பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்த நிலையில், குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் தென்னிலங்கை பிரதான கட்சி ஒன்றின் யாழ். மாவட்ட அமை ப்பாளர் எனவும் , அந் நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதுடன் வேறு நபர்களிடமும் பண மோசடிக ளில் ஈடுபட்டாரா என்பது தொட ர்பில் விசாரணைகளை முன் னெடுத்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-33)

# உயிர்நீத்த உறவுகளுக்கு பிதிர்க்கடன் செய்ய விசேட ஏற்பாடு

(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கான பிதிர்க்கடன் செய்கின்ற நிகழ்வு இவ்வருடமும் செய்வதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டி ருப்பதாக அதன் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தங்களுடைய உறவுகளுக்கான பிதிர்க் கடன் செய்ய விரும்புகின்ற உறவுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 7 மணி முதல் ஒன்பது முப்பது மணி வரை கப்பல் வீதியிலே உள்ள கடற்கரைப் பகுதியில் விசேடமாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ள இடத்திலே இந்த பிதிர் கடன்களை செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் உறவுகளை கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத் துள்ளனர்.

தமிழின படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க் கால் நினைவு முற்றத்தில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற உள்ளதாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அழைப்பு விடுத்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.சாந்தகௌரி ஸ்ரீகுமார்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்.


**அம்பிகைபாகன் நாகேந்திரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

(0060)

## கண்ணீர் அஞ்சலி



வலம்புரி பத்திரிகை
காரியாலயத்தில்
பணியாற்றிய ஜோ.டிலைக்சனா
மற்றும் அ.யுஸ்ரினா
ஆகியோரின் அன்புத் தந்தை
அமரர்.

**அந்தோனிப்பிள்ளை சேவியர்**


அவர்கள் காலமான செய்தியறிந்து
துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
வலம்புரி பத்திரிகை நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்தியாவிற்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்த மாலைதீவு ஜனாதிபதி



(மாலைதீவு)

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிசு இந்தியாவிற்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவை விட சீனாவுக்கு ஆதரவான மாலைதீவு ஜனாதிபதி, இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையே கடந்த காலங்களில் ஏற்பட்ட விரிசலைத் தீர்த்து வைப்பார் என நம்புவதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா சமீர் புதுடில்லி சென்றுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மூசா சமீர் ஊடாக இந்தியாவிற்கு விஜயம் செய்ய விரும்புவதாக மாலைதீவு ஜனாதிபதி இந்திய அரசாங்கத்திற்கு அறிவித்துள்ள நிலையில், இது தொடர்பில் இந்திய அரசாங்கம் இதுவரை எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை. (நி-6)

## பாண்டாவாக மாறிய நாய் ஏமாற்றிய பூங்கா நிர்வாகம்



(பீஜிங்)

சீனாவில் சௌ சௌ இன நாய்களுக்கு கறுப்பு, வெள்ளை வர்ணம் பூசி பாண்டா கரடியாக மாற்றி பார்வையாளர் களை பூங்கா நிர்வாகம் ஏமாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவமானது சீனாவின் தைசௌ உயிரியல் பூங்காவில் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், சௌ சௌ இன நாயை பாண்டா என நினைத்து தினமும் ஏராளமானோர் காணக் குவிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

“எங்கள் பூங்காவில் பாண்டா இல்லாததால் இப்படி செய்தோம். நாம் முடிக்கு டை அடிப்பது போல் தான் இதுவும். இதனால் நாய்க்கு எந்த பாதிப்பும் இல்லை” என பூங்கா நிர் வாகி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை இதற்கு முன்பு சீனாவில் உள்ள ஹாங்சோ உயிரியல் பூங்காவில் ஏஞ்சலா என்ற பெயர் கொண்ட மலேசிய சூரிய கரடி பார்ப்பதற்கு மனிதனை போல தோற்ற மளித்ததால் பார்வையாளர்கள் அதை கரடி வேடம் போட்ட மனிதன் என்று தவறாக புரிந்து கொண்ட சம்பவம் ஒன்றும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஈரானை அச்சுறுத்தினால் பதிலடி உக்கிரமாக இருக்கும்

### இஸ்ரேலை மிரட்டும் ஈரான்

(டெஹ்ரான்)

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் 12 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடி மிகவும் உக்கிரமாக இருக்கும் என்று ஈரான் எச்சரித்தது.

இந்த நிலையில் இஸ்ரேலுக்கு ஈரான் அணு குண்டு தாக்குதல் மிரட்டல் விடுத்து உள்ளது. இதுகுறித்து ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலிகமேனியின் ஆலோசகர் கமல் கர்ராசி கூறியதாவது

அணுகுண்டை உருவாக்குவது குறித்து எங்களிடம் எந்த முடிவும் இல்லை.

அணுஆயுதங்களை பெற்றுக்கொள்ளுதல் அல்லது உற்பத்தி செய்தல் போன்ற எண்ணம் எங்களுக்கு இல்லை .ஆனால் ஈரானின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், எங்கள் ராணுவக் கோட்பாட்டை மாற்றுவதைத் தவிர வேறு வழி யில்லை.

இஸ்ரேல் எங்களது அணுச்சக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தினால் எங்களது தடுப்பு நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

உலக வல்லரசு நாடுகளுடன் 2015 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட அணு சக்தி ஒபப்பந்தத்தை மீறி ஈரான் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக யுரேனியத்தை 60 சதவீதம் செறிவூட்டி வருகின்றது என்று கூறப்படுகின்றது. (நி-6)



# ஐ.நா

பாலஸ்தீ

## ஐ.

(நியூயோர்க்) —
பாலஸ்தீனத்தை
என்று அரபு நாடு
தீர்மானம் ஒன்றை


இதையடுத்து ஐ.நா பொதுச்சபையின் அவசர கூட்டம் நடந்தது.

இதில் பாலஸ்தீனத்தை ஐ.நா பொ துச்சபையில் முழு நேர உறுப்பினராக சேர்ப்பது தொடர்பாக வரைவு தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடந்தது.

தீர்மானத்திற்கு இந்தியா உட்பட தெரிவித்
அமெ
உட்பட
வாக்கள
வாக்கெ
புறக்கண
இதற்
எதிர்ப்பு
விற்கா

## இஸ்ரேலிய ஒரு இனப்படுகொ

### கொலம்பிய ஜனாதிபதி க



(கொலம்பியா)

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வரலாற்றில் ஒரு இனப்படுகொலையாளன் என பதிவு செய்யப்படுவார் என கொலம்பிய ஜனாதிபதி கஸ்டவோ பெட்டிரோ சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

அவர் அப்பாவி சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் மீது ஆயிரக்கணக்கில் குண்டுகளை வீசுகின்றார். இதன் காரணமாக அவர் கதாநாயகனாக மாறமுடியாது. என அவர் பதிவிட்டுள்ளார்.
மி
கை
களு
பதி
மத
கொ
கொ
என
ளார்.
மு
திபதி
ஹம
பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நா வில் உறுப்புரிமை;

# லதீனத்திற்கு 143 நாடுகள் ஆதரவு

## ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றம்

)

**த்தை முழு நேர உறுப்பினராக சேர்க்க வேண்டும் நாடுகள் கூட்டமைப்பு ஐ. நா. பொதுச்சபையில் ர்றை கொண்டுவந்தன.**




உட்பட 143 நாடுகள் ஆதரவு தெரிவித்து வாக்களித்தன.

அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட 9 நாடுகள் எதிராக வாக்களித்தன. 25 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன.

இதற்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. ஐ.நா விற்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் பேசும்போது. இந்தத் தீர்மானம் ஐ.நா சாசனத்தின் தெளிவான மீறல் என்றார்.

மேலும் தீர்மான நகலை கிழித்தார். காகிதங்களை கிழிக்கும் கருவியில் தீர்மான நகலை போட்டார்.

பாலஸ்தீனத்தை முழு நேர உறுப்பினராக்க ஐ.நா. பொதுச் சபையில் ஆதரவு கிடைத்துள்ள நிலையில் பாதுகாப்பு கவுன்சில் முடிவு எடுக்க உள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் பாலஸ்தீனம் ஐக்கிய நாடுகள் அவையில் உறுப்பினர் அல்லாத பார்வையாளராக மட்டும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேலின் போர் 7 மாதங்களாக நீடித்து கொண்டிருக்கிறது.

இப்போரை நிறுத்தக் கோரி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி முறியடித்தமை குறிப்பிடத்தக்கது (நி-6)

## ிய பிரதமர்

## டுகொலையாளி

### திபதி கடும் விமர்சனம்



ளார்.

மில்லியன் கணக்கில் யூதர்களை கொலை செய்த நாஜிகளுடன் இஸ்ரேலிய ஜனாதிபதியை ஒப்பிட்டுள்ள அவர் எந்த மதத்தினரையும் நீங்கள் கொலை செய்தாலும் இனப்படு கொலை இனப்படு கொலை தான் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கொலம்பிய ஜனாதிபதியை இஸ்ரேல் பிரதமர் ஹமாஸ் ஆதரவாளர் என குறிப்பிட்டிருந்தார். (நி-6)

## சூரிய புயல் தாக்கத்தால் வானில் தோன்றிய துருவ ஒளி

### புகைப்படம் எடுத்து மகிழ்ந்த மக்கள்

(வோஷிங்டன்)

சூரியனின் மேற்பரப்பில் இருந்து கிளம்பும் மின்காந்த வெடிப்புகள் மற்றும் சக்திவாய்ந்த ஆற்றல்கள் சூரிய புயல் என்று அழைக்கப்படுகிறது.

சூரிய புயல், புவி மற்றும் அதன் காந்த மண்டலம் உள்ள டக்கிய முழு சூரிய மண்டலத் தையும் தாக்கும்.இந்த நிலையில் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சக்தி வாய்ந்த சூரிய புயல் கடந்த வெள்ளிக்கிழமை பூமியைத் தாக்கியது.

இதன் எதிரொலியாக பூமியின் வட துருவத்தில் வானில் பல வர்ணங்களில் துருவ ஒளி (அரோரா பொரியாலிஸ்) தோன்றியது.இந்த ஒளி வெள்ளம் பார்த்தவர்களை பரவசமடையச் செய்தது. சூரிய புயல் தாக்கியதைத் தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து ,ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளும் அரிய துருவ ஒளி நிகழ்வைப் பார்க்க முடிந்தது. ஒளி வெள்ளத்தில் வெளிர்பச்சை நிறம் பொதுவானது. அதோடு, சிவப்பு, நீலம் ஆகிய வர்ணங்களும் தோன்றுவது உண்டு. இந்த முறை இளஞ் சிவப்பு நிறமும் காணப்பட்டது.

பூமியை சூரிய புயல் தாக்கும் போது மின்கட்டமைப்புகள், தொலை தொடர்பு [illegible] மற்றும் செயற்கைக்[illegible] பாதிப்பு ஏற்படுவது வழக்கம்.

அந்த வகையில் ஏற்கனவே இது தொடர்பான எச்சரிக்கையை அமெரிக்க கடல், வளிமண்டல ஆய்வகம் தெரிவித்து இருந்தது.

அரிதான மற்றும் கடுமை யான சூரிய புயலின் விளைவுகள் வார இறுதி வரை மற்றும் அடுத்த வாரம் வரை நீடிக்கும் என்றும், மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் செயற்கைக்கோள்களை இயக்குபவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் என வளிமண்டல ஆய்வகம் எச்சரித்தது.

இதனிடையே சூரிய புயலால் வானில் உருவான ஒளிவெள்ளத்தை கண்டு ரசித்த மக்கள் அதை புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு மகிழ்ந்தனர்.துருவ ஒளி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின.

இந்த நிலையில் சூரிய புயலால் உருவான ஒளி வெள்ளம் இந்தியாவின் லடாக் பகுதியிலும் வானில் வர்ணஜாலத்தை நிகழ்த்தியது. லடாக்கின் ஹான்லே நகரில் வானில் சிவப்பு ஒளி தோன்றியது இது நேற்று முன்தினம் அதிகாலை வரை தொடர்ந்தது.

இதற்கு முன்னர் கடந்த 2003 ஆம் ஆண்டு சூரிய புயல் தாக்கியதும். அப்போது சுவீடன் மற்றும் தென் ஆபி[illegible] (நி-6)

## ஆப்கானிஸ்தானில் கொட்டித்தீர்த்த கனமழைக்கு 200 பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடக்கு மாகாணமான பாக்லானில் நேற்று முன் தினம் பெய்த கன மழையில் 200 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கன மழை காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்துள்ளதாக புலம்பெயர்ந்தோர்களுக்கான ஐ.நா வின் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

பாக்லானி ஜாதித் மாவட்டத்தில் மட்டும் 1500 வீடுகள் சேதம் அடைந்துள்ளது. 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஆனால் தலிபான் அரசு 62 பேர் உயிரிழந்ததாக நேற்றிரவு தெரிவித்திருந்தது.

ஆப்கானிஸ்தானின் பல்வேறு மாகாணங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. தகார் மாகாணத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடகிழக்கு மாகாணம் பாதாக்ஷன், மத்திய கோர் மாகாணம், மேற்கு ஹெராத் ஆகியவையும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் வறட்சி தொடர்பான அமைப்பைக் கொண்ட ஆப்கானிஸ்தான், கன மழையை எதிர்கொள்ள முடி யாமல் திணற வேண்டிய நிலை ஏற்பட்டது. பருவகால மாற்றம் காரணமாக மிகவும் பாதிக்கக் கூடிய நாடாக ஆப்கானிஸ்தான் மாறி வருகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பொன்னாவரசு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- Cassia sophera
Family- Fabaceae

நிழலை விரும்பும் மூலிகை ஆகும். உடலில் அதிகரித்த வெப்பத்தை தணிக்கக்கூடிய குளிர்ச்சியான மூலிகையாகும். மாசி, பங்குனி மாதங்களில் நிறைய பூக்களைக் காணலாம். பூக்கள் மஞ்சள் நிறமானவை. கொத்தாக பூக்கக் கூடியது. இதன் இலைகள், பூக்கள் மருத்துவகுணமுடையவை. இதன் இலை ளை துவையல் செய்து சோற்றுடன் உண்ண உடலில் உண்டான வெப்பம் தணிந்து இலகுவில் மலம் கழியும். இதனை பருப்புடன் சேர்த்து கடைந்து உண்ணலாம்.

ஒரு பானையில் நீரினை நன்கு கொதிக்க வைத்து பொன்னாவரசு இலைகளை போட்டு மீண்டும் கொதிக்க விட நீரின் நிறம் மாறும். அத்தருணத்தில் இறக்கி வடித்து மெல்லிய சூட்டில் புண்களை கழுவ, தோலில் அரிப்பு ஏற்பட்டால் அவ்விடங்களையும் கழுவ, தோல் தொற்றுக்கள் நீங்கி தோல் மிருதுவாகவும் வரும். பொன்னாவரசு இலைகளை அம்மியில் வைத்து நன்கு அரைத்து கறிமஞ்சள் சேர்த்து மீண்டும் அரைத்து சிரங்கு, கரப்பன் உள்ள இடத்தில் கனமாக பூசி 15 நிமிட நேரம் ஊற வைத்து உப்புத்தண்ணீரில் கழுவி, ஈரம் உலர்ந்த பின்பு சிரங்கு, கரப்பன் இடங்களில் சுத்தமான தேங்காய் தேங்காய் எண்ணெயை தடவி விடலாம். இதன் இலைகளை பழச்சாறு (எலுமிச்சம்பழம்) விட்டு அரைத்து வட்டக்கடிக்கும் பூசலாம். பொன்னாவரசு இலைகளை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் குறையும். நீரிழிவு நோயாளர்களும் வாரத்தில் மூன்று நாட்கள் சாப்பிடலாம். உடற்பருமன் குறைக்கக்கூடிய சிறந்த மூலிகையா கும்.

**வெப்பகாலத்திற்கு உகந்த பொன்னாவரசு இலை சூப்**

பொன்னாவரசு இலை-4 கைப்பிடி அளவுவெந்தயம் - 1/4 கப், தக்காளி-2, துவரம்பருப்பு-50கிராம், இலவங்க மப்பட்டை-1துண்டு, இஞ்சி-1 துண்டு, உள்ளி-5 பல்லு, மல்லி-25கிராம் சீனி, பெருஞ்சீரகம், உப்பு தேவையானளவு. மல்லியை நன்கு அரைத்து பெருஞ்சீரகத்தையும் சேர்த்து அரைத்து பொன்னாவரசு இலைகளைக் கழுவி அரிந்து நீரில் வேகவிடவும். அதில் அரை த்த விழுது, உப்பு, வெங்கா யம் அரைவாசி சேர்த்து துவரம் பருப்பையும் வேக வைத்து கடை ந்து வேக வைத்த பொன்னாவரசு இலையில் சேர்க்கவும். வாணலியை அடுப்பில் வைத்து சிறிது நெய் விட்டு அதில் சீரகம், இலவங்கப்பட்டை போட்டு வெடித்து சிவந்ததும் இஞ்சி, உள்ளி அரைத்து விழுதாக போட்டு கிளறி சூப்பை ஊற்றி கிளறி விடவும். கலக்கி ஆற விட்ட பின் சூப்பாக அருந்தலாம்.

உடற்சூடு, உடல் வலி ஆகியவை நீங்கி, மலம் நன்கு வெளியாவதுடன் தோல் நோய் உள்ளவர்கட்கும் நீரி ழிவு நோயாளர்கட்கும் சிறந்த சூப் வகை ஆகும்.இக்கீரையில் இரும்புச்சத்து, உயிர்ச்சத்து A போன்றன அதிக ளவில் காணப்படும். இதனால் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கூடியதாக இருக்கும்.

**பொன்னாவரசு இலை அடை**

இதற்கு பொன்னாவரசு இலைகளை நன்கு கழுவி வைத் துக்கொள்ள வேண்டும். சிவத்த பச்சரிசியை நன்கு ஊறவிட்டு வடித்து, ஈர அரிசியுடன் பாசிப்பயறு, பொன்



னாவரசு இலைகளை சேர்த்து நன்கு மிக்சியில் அடித்து அரைத்து தேங்காய்ப்பூ, அளவான உப்பு சேர்த்து அடையாக தட்டி நல்லெண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து எடுத்து சாப்பிட்டு வர உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

கல்லீரலை பலப்படுத்துவதற்கு இதனுடைய இலைகள் கைபிடி அளவு எடுத்து ஒருடம்ளர் வெந்நீரில் 15-20 நிமிடங்கள் ஊற வைத்து வடித்து அருந்தி வர கல்லீரல் பலப்படும். பொன்னாவரசு மூலி கையை புலிநகக் கொன்றை எனவும் கூறுவர். எல்லா நிலங்களிலும் வளரும். என்றாலும் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் இதன் பரம்பல் அதிகம். பொன்னாவரசு , ஆவரசு இரண்டும் வெவ்வேறு மூலிகைகள். ஆவரசு மூலிகையில் இலையடிச் செதி ல்கள் காணப்படும். இரண்டும் மருந்துக் குணங்கள் நிறைந்தவையாகும். பொன்னாவரசு மூலிகைக்கு குடற்புழுக்களை அழிக்கும் தன்மை உண்டு. இதற்கு அதன் இலை, காய்களை அரைத்து ஐந்து கிராம் அளவு காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிட்டு மோரும் அருந்த குடற்புழுக்களை நீக்கும்.

## இன்று ஒரு தகவல் 122



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இன்பமும் துன்பமும்!

இன்பம் – துன்பம் இரண்டும் சேர்ந்தது தான் வாழ்க்கை! இது எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிற ஒரு உண்மை. அது சரி இது இரண்டும் வருவதற்கு என்ன காரணம்? துறவி ஒருவர் (ஸ்ரீ சங்கரானந்த ஜீ) இதைப் பற்றி யோசித்துப் பார்த்திருக்கிறார். இன்பம் துன்பம் தோன்றுவதற்கு முக்கியமாக ஆறு காரணங்கள் உண்டு என்கிறார் அவர். அது என்ன என்பதை நாமும் தெரிந்து கொள்வோமே!

முதல் காரணம் சுயநலம். ஒரு தாயார் தன்னுடைய சுயநலம் கருதி தன் மகன் இன்பமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். மகனும் அப்படியே ஆசைப்பட்டான். அதனால் தாயின் இன்ப துன்பங்களைப் பார்த்து விட்டு மகனும் இன்பம், துன்பம் அடைகின்றான். அந்த அம்மாவுக்கும் அதே நிலைமை தான்.

இரண்டாவது காரணம் உறவு. நான் துறவி ஆன பிறகு கூட உறவு என்ற காரணத்தால் தாயாரின் சுகதுக்கங்களைக் கண்டு நானும் சுகதுக்கம் அடைகின்றேன். என் தாயாரின் நிலையும் இது தான் என்றார் அந்தத் துறவி.

மூன்றாவது காரணம் அறிமுகம். எனக்கு அறிமுகமான ஒருவரை புகையிரத நிலையத்திலே சந்திக்கிறேன். அவர் தன்னுடைய பணப்பையை எங்கேயோ தொலைத்து விட்டேன் என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். நானும் வருத்தப்படுகிறேன். அந்த சமயத்திலே யாரோ ஒருவர் இது தான் உங்கள் பணப்பையா? என்று கொண்டு வந்து நீட்டுகிறார். பணப்பையைத் தொலைத்தவர் சந்தோசப்படுகிறார். நானும் சந்தோசப்படுகிறேன். இது அந்தத் துறவி கூறும் அனுபவம்.

நான்காவது காரணம் கருணை. எனக்கு அறிமுகமில்லாத ஒருவனை யாரோ ஒருவன் அடித்துக் காயப்படுத்தி விட்டான். கருணை காரணமாக நான் அதற்காகத் துக்கப்படுறேன்.

ஐந்தாவது காரணம் எதையும் நம்புவது. ஒரு பசு மாட்டை ஒரு முரடன் அடித்துக் கொண்டிருக்கின்றான் என்று ஒருவர் வந்து சொன்னார். உடனே நான் துக்கப்படுகின்றேன். இன்னொருவர் வந்து அந்த முரடனை பொலிஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னார். நான் சந்தோசப்படுகிறேன். மூன்றாவதாக ஒருவர் வந்து இவர்கள் இருவரும் கூறுவது பொய் என்றார். அப்போது நான் இன்ப துன்பமின்றி நிம்மதியாக இருக்கிறேன்.

ஆறாவது காரணம் தன் மயமாகுதல். ஒரு நாவல் படித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே வரும் பாத்திரங்களுடன் நாம் ஒன்றிப் போகிறோம். அதனால் அது சிரிக்கும் போது நாமும் சிரிக்கிறோம். அது அழும் போது நாமும் அழுகிறோம். இது எல்லாம் அந்தத் துறவி கூறும் அனுபவ உண்மைகள்.

இன்ப துன்பம் தோன்றுவதற்கு சுயநலம், உறவு, அறிமுகம், கருணை, எதையும் நம்புவது, தன் மயமாவது இது எல்லாம் தான் முக்கிய காரணம் என்றார் அவர். ஆகக்கூடி ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் யோசனை செய்து பார்த்தால் பிற பொருட்கள் மீதுள்ள பற்றுதல் காரணமாகத் தான் நாம் இன்ப துன்பம் அடைகின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மனிதன் இன்ப துன்பம் அடைவதற்கு ஏழாவது காரணம் கூட ஒன்று உள்ளது சார்..! அப்படி சொல்லிக் கொண்டே வந்தார் ஒருவர். அவர் ஒரு நேயர். அது என்ன சார்? என்று ஆர்வமாகக் கேட்டேன். அது தான் சார் இன்று ஒரு தகவல் என்றார் அவர். எப்படி சொல்கிறீர்கள்? என்றேன். இன்று ஒரு தகவல் கேட்க ஆரம்பிக்கும் போது மனதிலே இன்பம் ஆரம்பித்தவுடனே இது ஏற்கனவே கேட்ட விடயம் என்று நினைக்கும் போது துன்பம்! என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட மகளிர் உதைபந்தாட்டம்
## 12 வயது பிரிவில் சம்பியனான மகாஜனக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட உதைபந்தாட்டத்தில் 12 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்து இலங்கை பாடசாலைகள் உதை பந்தாட்டச் சம்மேளனத்தால் 12 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டி கொழும்பு குதிரைப் பந்தைய விளையாட்டுத் திடலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து குருணாகல் மலியதேவ பெண்கள் கல்லூரி அணி மோதியது.

முதலாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீராங்கனை யாழினி ஒரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சமபலத்துடன் மோதினர்.




இருப்பினும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீராங்கனை கேதாரணி தனது அணிக்கான சிறப்பான கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். (நி-6-33-90)

# ஒரு கிலோ 760 கிராம் கஞ்சா
## கிளிநொச்சியில் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியான கனகபுரம் மற்றும் விவேகானந்த நகர்ப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஒரு கிலோ கிராம் 760 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றினை வழிமறித்து சோதனையிட முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிளையும் ஒரு கிலோ 500 கிராம் கஞ்சாவையும் விட்டு சந்தேக நபர் தப்பித்துச் சென்றுள்ளார்.

அதேவேளை கிளிநொச்சி பொலிஸ் மது ஒழிப்பு பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய வீதியில் சென்ற இரண்டு பேரை சோதனைக்கு உட்படுத்திய போது 260 கிராம் கஞ்சா மீட்கப்பட்டதுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா, இரண்டு மோட்டார் சைக்கிள் மற்றும் இரண்டு சந்தேக நபர்களையும் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3115

ஜோதி




கதிர்




சங்கவி




நித்தீஸ்




குணா




வைசு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

479





தூங்குகிறவர்களைத் தாக்கிக் கொல்லும் இரண்டு சூரர்களைப் பலியாகக் கொடு என்று கேட்கிறான்! பலி கொடுத்தால் தான் மேலே இந்த மரக்கலத்தைப் போக விடுவேன் என்கிறான். எங்கே! உடனே அப்படி இரண்டு பேரும் வந்து தலையை நீட்டுங்கள்! சீக்கிரம்!" என்று ஆர்ப்பரித்தான்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை வியப்புடன் உற்றுப் பார்த்தான். "ஹா! ஹா! ஹா!" என்று மறுபடியும் பேய் சிரிப்பது போல் சிரித்தான்.

"தம்பி! இது என்ன விளையாட்டு?" என்றான்.

"அண்ணன்மார்களே! இது விளையாட்டு அல்ல வினை! சற்று முன் நான் கீழே கட்டப்பட்டுக் கிடந்தபோது சிறிது தூங்கிப் போனேன். அப்போது கனவு கண்டேன். கடலையும் வானத்தையும் ஒன்றுசேர்த்த பூதம் போன்ற நீல நிற உருவம் ஒன்று என் முன்னால் நின்றது. ஏதோ சொல்லியது, அது என்னவென்று அப்போது புரியவில்லை இப்போது புரிந்தது! மந்திர தந்திரங்களில் தேர்ந்த காளி பக்தர்கள் இரண்டு பேருடைய உயிர்ப் பலி வேண்டும் என்று சமுத்திரராஜன் கோருகிறான். கொடுக்காவிட்டால் இந்தக் கப்பலை மேலே போக விட முடியாது என்றும் சொல்லுகிறான். ஆறு முரட்டு அராபியர்களின் உயிர்ப் பலியினால் அவன் திருப்தி அடையவில்லை. வாருங்கள்! சீக்கிரம்!" என்று கூறி, வந்தியத்தேவன் கையில் பிடித்த கத்தியை வானை நோக்கி உயர்த்தினான்.

ரவிதாஸனும், தேவராளனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ரவிதாஸனும், "தம்பி! கதை கட்டுவதில் உன்னைப் போன்ற கெட்டிக்காரனை நான் பார்த்ததேயில்லை!" என்றான்.

வந்தியத்தேவன், "ஓ! நான் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? கதை கட்டுகிறேனா? சமுத்திர ராஜனே இந்த மூடர்களுக்கு நீயே மறுமொழி சொல்!" என்று கூவினான்.

அவன் அவ்வாறு கூவிய குரல் சமுத்திர ராஜனுடைய் காதிலே கேட்பது போலும். அதற்கு மறுமொழி கூறவும் சமுத்திர ராஜன் விரும்பினான் போலும்!

கடலில் அப்போது ஒரு விந்தையான காட்சி தென்பட்டது. கண்ணுக்கெட்டிய தூரம் நாலு திசைகளிலும் கடல் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது. சிறிய சிறிய சின்னஞ் சிறிய அலைகள் ஆயிரமாயிரம் எழுந்து விழுந்தன. இது ஒரு நிமிட நேரந்தான். அடுத்த நிமிடத்தில் அவ்வளவு அலைகளும் வெள்ளிய நுரையின் நுண் துளிகளாக மாறின. விரிந்து பரந்த கடற் பிரதேசமெங்கும் அந்த வெண் நுரைத் துளிகள் துள்ளி விளையாடின. விசாலமான பசும்புல் தரையில் கோடி கோடி கோடித் தும்பை மலர்களை இளங்காற்றில் உருண்டு உருண்டு உருண்டு போய்க் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்! அவ்வாறு இருந்தது அச்சமயம் கடலின் காட்சி!

ஆம் இலேசான இளங் காற்று, இனிய குளிர்ந்த காற்று அந்த மரக்கலத்தையும் ஒரு கணம் தழுவிக் கொண்டு அப்பால் சென்றது. கப்பலில் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது. வெப்பத்தினால் வறண்டிருந்த வந்தியத்தேவனுடைய உடலும் சிலிர்த்தது.

ரவிதாஸனும், தேவராளனும் 'ஹா ஹா ஹா!' என்று சிரித்தார்கள்!

"தம்பி! சமுத்திர ராஜனே உன் கேள்விக்கு மறுமொழி சொல்லிவிட்டான்! நாங்கள் எங்களைப் பலி கொடுக்க ஆயத்தமாக வேண்டியது தான்!" என்றான் ரவிதாஸன்.

வந்தியத்தேவன் உள்ளம் கலக்கமுற்று. கடலிலே ஏற்பட்ட அந்தச் சிலு சிலுப்பும் உடனே ஏற்பட்ட மாறுதலும் அவனைத் திகைக்கச் செய்திருந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நட்புக்குத் துரோகம்




அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அதாவது நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும், இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி, தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக கழுதையின் இருப்பிடத்தை நோக்கிச் அந்த அடர்ந்த காட்டின் வழியே சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும், சிங்கம் ஒன்று அந்த நரியினை வழி மறித்தது. சிங்கத்தைக் கண்டு அந்த நரி நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா என யோசித்தது.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, "மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போவதில்லை. உங்களுக்கு நான் [illegible] ஏற்பாடு [illegible] றைச் செய்ய முடியும். என் நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்!" என்று கூறிற்று.

அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது.

நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

"நண்பனே! இரை தேடச் செல்லலாமா?" என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப் போய், "மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன். இப்போது என்னையே கொல்ல வந்து விட்டீர்களே!" என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

"நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே, உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது" என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது.

நீதி: கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை தன்னை சரியான நேரத்தில் தானே வெளிப்படுத்திக் கொள்ளும் திறன் கொண்டது.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நம் தமிழினம் பட்ட அவலத்தை வரலாறாக எடுத்துக் கூறுங்கள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது எங்கள் தமிழினத்துக்குச் சிங்களப் பேரின வாதம் செய்த உச்சக்கட்டக் கொடுமையின் மறக்கமுடியாத அடையாளம்.

ஆம், இனத்தின் பேரால் இலங்கையின் சிறுபான்மைத் தமிழ் மக்கள் கொன்றொழிக் கப்பட்டதை நீள நினைக்கின்ற நாள்,

அந்தோ! கொடுமை. ஆட்சி அதிகாரத்தின் பேரால் பெரும்பான்மை இன ஆட்சியாளர் கள் நாட்டைத் தமதாக்கும் பொருட்டு சிறு பான்மைத் தமிழ் மக்களைக் கொன்று அதன் மூலம் தமிழின அழிப்பை மேற்கொண்டனர்.

அந்த இன வெறிப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த உலகில் எது மிக மோசமான குற்றமோ, எதனை மனித குலம் வெறுக்கின்றதோ அந் தப் போர்க் குற்றச் செயல்கள் தமிழ் மண் ணில் தலைவிரித்தாடின.

உண்மை. ஒரு நாட்டின் படையினர் அந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளையும் காப் பாற்றுகின்ற கடமைப்பாட்டைக் கொண்டவர் கள்.

ஆனால் இங்கு இலங்கைப் படையினர் தம்மை சிங்கள இனத்தின் படையாகப் பிரகட னம் செய்து கொண்டு, அப்பாவித் தமிழ் மக்களை எதிரிகளாகக் கருதி, அவர்கள் மீது குண்டுகளை வீசியும் விமானத் தாக்குதல் களை நடத்தியும் ஈவுஇரக்கமின்றிக் கொன்று குவித்தனர்.

இதில் பெண்கள், குழந்தைகள், முதியவர் கள் என்ற எந்தப் பாகுபாடும் சிங்களப் படை யினரிடம் இருந்திருக்கவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை - அவர் களை வழிப்படுத்தியவர்களைப் பொறுத்த வரை தமிழராக இருந்தால் அதுவொன்று போதும் அவர்களைக் கொல்வதற்கு என் பதே நியதியாக இருந்தது.

ஆம், உலகம் பார்த்திருக்க, ஐயகோ! எங் களைக் காப்பாற்றுங்கள் என்று வன்னிப் பெருநிலப்பரப்பின் யுத்த சூழலில் அகப்பட்ட மக்கள் கூக்குரலிட, அங்கு கடமையில் இருந்த சர்வதேசத் தொண்டு அமைப்புக்களை வெளி யேற்றிவிட்டு, கொத்துக் கொத்தாக தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட கொடுமை இந்த நூற்றாண்டில் நடந்த மிகப்பெரும் இன அழிப்பு என்பது வரலாறாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

இந்த வரலாறு ஈழத் தமிழினம் பற்றிய வரலாற்றின் முக்கிய பகுதி. இதனை எமது இளம் தமிழ்ச் சமூகம் மட்டுமல்ல, சிங்கள இனத்தின் இளம் சமூகமும் நிச்சயம் அறிய வேண்டும்.

ஏனெனில் தங்கள் இனம் எப்படியெல் லாம் தமிழ் மக்களை அழித்திருக்கிறது. தங் கள் இன ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் பட்ட துன்பம் கொஞ்சமல்ல. இந்த நாட்டின் படையினர் சிங்களப் படையாக இருந்தத னால்தான், இலங்கை இத்துணை அழி வைச் சந்தித்தது என்ற உண்மையையெல்லாம் சிங்கள இளம் சமூகம் அறியும்போதுதான் இன ஒற்றுமை பற்றிய சிந்தனை உயிர்ப்புப் பெறும்.

ஆம், ஒரு நாட்டுக்குள் நடந்த தமிழினப் படுகொலை மன்னிக்க முடியாத மிகப் பெரும் குற்றம். அந்தக் குற்றம் இழைக்கப்பட்டதால், இலங்கைத் திருநாடு பஞ்சமுற்றது. பொரு ளாதாரம் அழிவுற்றது. நாட்டின் செல்வம் கபளீகரம் செய்யப்பட்டது.

அதன் விளைவை சம்பந்தப்பட்ட ஆட்சி யாளர்கள் கண்முன்னே அனுபவித்தனர்.

ஆகையால் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் என்பது எங்கள் இனத்துக்கு இழைக் கப்பட்ட கொடுமையை வரலாறாக மற்றவர் களுக்குக் கூறுகின்ற காலமாகவும் ஆக்கப் பட வேண்டும்.

அப்போதுதான் முள்ளிவாய்க்காலில் நடந் தவை வரலாறாகக் கடத்தப்படும்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 50 வது நாளை எட்டிய போராட்டம் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கல்முனை)

கல்முனை வடக்கு பிர தேச செயலக நிர்வாகச் செயற்பாட்டிற்கு எதிரான அடக்கு முறைகளையும் அத்துமீறல்களையும் கண் டித்து பிரதேச செயலகத் தின் முன் இடம்பெற்று வரும் போராட்டத்தின் 50 வது நாளை நோக்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை மாபெ ரும் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

கல்முனை வடக்கு பிர தேச செயலகத்தின் நிர் வாக உரிமைக்கான போரா ட்டம் பிரதேச செயலகத் தின் முன்னால் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பித்து 50 வது நாளாக இடம்பெற்று வரு கின்றது.

இந்த 50 ஆவது நாளை நோக்கிய போராட்டத்தை யிட்டு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி க்கு போராட்ட இடத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் ஒன்று திரண்டு

தமிழ் அரசியல் வாதி களே ஏன் இன்னும் மௌனம், ஒரு அரசியல் வாதியை மகிழ்ச்சிப்படுத்து வதற்காக 40 ஆயிரம் பொது மக்களை துன்புறுத் துவது நியாயமா?

பிரதேச செயலகத்துக்கு மலசலகூடம் திருத்துவத ற்குக் கூட நிதிவழங்கப்ப டுவதில்லை, பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகமாக மாற்றுவதை உடன் நிறுத்து, அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளில் அகப்பட வேண்டாம், அபி விருத்தி திட்டங்களால் புறக்கணிக்கப்பட்டு வரு கின்றோம், எமது வளங் கள் அந்நியர்களால் சுவீ ரம் செய்யப்பட்டு வருகின் றது, அரச நிதிப் பங்கீட்டில் புறக்கணிக்கப்பட்டு வரு கின்றோம், எமது பிரதேச செயலகம் எமக்கு வேண் டும் போன்ற சுலோகங் களை ஏந்தியவாறு கறுப் புக் கொடிகளை தாங்கிய வண்ணம் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். (ந-7,10)

# ஆங்கிலப் பாட வினாத்தாளை வெளியிட்ட ஆசிரியர் கைது

க.பொ.த சாதாரண தர ஆங்கில மொழி வினாத் தாளை புகைப்படம் எடு த்து, வாட்ஸ்அப் குழுவில் வெளியிட்ட சம்பவம் தொடர் பாக தனியார் வகுப்பு ஆசி ரியர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் குறித்த ஆசிரியரை கண்டி யில் வைத்து நேற்று கைது செய்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணை யில் வாட்ஸ்அப் குழுவில் ஆயிரத்து 25 உறுப்பினர் கள் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் ஆங்கில வினாத்தாள் கடந்த 9ம் திகதி நடைபெற்றதுடன், கால அட்டவணைப்படி காலை 8.30 மணிக்கு மாணவர்களுக்கு வினா த்தாள் வழங்கப்பட்டது.

எனினும், பிரஸ்தாப ஆசிரியரால் காலை 9.11 மணியளவில் வாட்ஸ்அப் குழுவில் ஆங்கில வினா த்தாள் வெளியிடப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித் தனர்.

சம்பவம் தொடர்பில் பரீட்சை திணைக்கள அதி காரிகளிடமும் வாக்குமூ லம் பதிவு செய்யப்பட்டு ள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களைப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பிரேம ரத்னவின் மேற்பார்வையில் குற்றப்புலனாய்வுத்திணைக் களத்தின் விசேட புலனாய் வுப் பிரிவினர் மேற்கொ ண்டு வருகின்றனர்.

2023 ஆம் ஆண்டுக் கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கடந்த 06 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

ஓமானில் இருந்து சட்ட விரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டுவ ரப்பட்ட சுமார் பத்து இலட் சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளு டன் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

நேற்று கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் இவர் கைது செய்யப்பட்டுள்ள துடன் இவரிடமிருந்த வெளிநாட்டு சிகரெட்டுக ளும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால் கைப்பற் றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் ஹொரணை பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடை யவர் என்பதுடன் இவர் ஓமானில் கடை ஒன்றை நடத்தி வருவதாகத் தெரிய வந்துள்ளது .

10,000 "மான்செஸ்டர்" வகை சிகரெட்டுகள் அடங் கிய 50 சிகரெட் பெட்டிகள் அவரது பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்டி ருந்ததாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த நபர் சட்டவி ரோதமாக இலங்கைக்குக் கொண்டு வந்த வெளி நாட்டு சிகரெட்டுகளுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி நீர்கொழும்பு நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட வுள்ளார். (ந-7,10)

## அடுத்த மின் கட்டணத் திருத்தம் ஜூலை மாதம் நடக்கும்

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மேற்கொள் ளப்படும், மின்சாரக்கட்டண திருத்தத்தின்கீழ் அடுத்த திருத்தம், எதிர்வரும் ஜூலை மாதம் மேற்கொ ள்ளப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலை வர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் தென்மேற்கு பருவமழை யின் தீவிரத்தை பொறுத்து கட்டணத் திருத்தம் அமை யும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை தனது கட்டணத் திட் டத்தை விரைவில் சமர்ப் பிக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

கட்டணத் திருத்தம் தீர் மானிக்கப்படுவதற்கு முன் னர், பொதுமக்களிடமிரு ந்து பெறப்படும் முறைப் பாடுகளும் பரிசீலிக்கப்படும் என்றும் பேராசிரியர் பெர் னாண்டோ கூறியுள்ளார்.

இதேவேளை தென் மேற்கு பருவமழை மே 25ம் திகதி ஆரம்பிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ந-7,10)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியம் பெறும் நாடாக இலங்கை மீண்டும் தெரிவு

ஆசிய அபிவிருத்தி வங் கியின் பல பில்லியன் டொலர் அன்பளிப்பு நிதி யின் கீழ் 2025ஆம் ஆண்டு முதல் நான்கு வருடங்களுக்கு மானியங் களைப் பெறும், வளரும் நாடுகளில் இலங்கையின் பெயர் மீண்டும் சேர்க்கப்பட் டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஏழை நாடுகளில் ஏற்படும் காலநிலை மாற் றம் மற்றும் பேரழிவு அபா யத்தைக் குறைப்பதற்காக மானியங்களை வழங்கி வருகிறது.

இந்தநிலையில் இந்த திட்டத்தின்கீழ் இலங்கை க்கு கிடைக்கக்கூடிய மானி யத் தொகை தொடர்பில் இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும், நிதியத்தி லிருந்து மானியம் பெறு வதாக இலங்கை தெரிவு செய்யப்படுவது இது முதல் தடவையல்ல.

இலங்கையைத் தவிர அண்டை நாடுகளில்மாலை தீவு, ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ் மற்றும் பாகி ஸ்தான், பிஜி, டோங்கா, கிரிபதி, சமோவா, நவுரு, பலாவ் மற்றும் பப்புவா நியூ கினியா உட்பட்ட 28 நாடு கள் மானியம் பெறும் நாடு களாகப் பெயரிடப்பட்டுள் ளன.

காலநிலை மாற்றம், உணவு மற்றும் நீர் பாது காப்பு, பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் இந்த நிதியத்தில் இருந்து இலங் கைக்கு மானியங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்பம் ஒன்றின் மாதச்செலவு ஒரு லட்சத்தை தாண்டியது

## மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் குடும்பம் ஒன்றின் மாதச்செலவு ஒரு இலட்சம் ரூபாவினை கடந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

பணவீக்கம் காரணமாக இவ்வாறு மாதச் செலவு வெகுவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2023 ஆம் ஆண்டில் குடும்பம் ஒன்றின் மாதச்செலவு 16.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உணவு அல்லாத பொருட்களுக்கு கூடுதல் அளவில் மக்கள் செலவிட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் குடும்பம் ஒன்றின் உணவு அல்லாத செலவுகள் 56.2 வீதமாக காணப்பட்டுள்ளது.

உணவு அல்லாத பொருட்களின் விலை உயர்வு காரணமாக இவ்வாறு செலவுகளும் உயர்வடைந்துள்ளன. (நி-6)

## போலி கடவுச்சீட்டு; நால்வர் கைது

(கொழும்பு)

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து கனடா செல்ல முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளினால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்கு போலி கடவுச்சீட்டு தயாரித்து வழங்கிய யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இருவர் நீர்கொழும்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக போலி கடவுச்சீட்டு விவகாரங்கள் நாட்டில் அதிகரித்துள்ள நிலையில் போலி கடவுச்சீட்டு முகவர்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (நி-6)

## தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக மைத்திரி அறிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்

செயற்குழு கூட்டத்தில் அவர் இதனை அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் (நி-6)

## அடுத்த வருடம் முதல் மீண்டும் வாகன இறக்குமதி

### இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

வாகன இறக்குமதியை அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் முதல் மீண்டும் வாகன இறக்குமதியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்காது.

இதுவரை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வணிகத் தேவைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.



பொருளாதார பங்களிப்பிற்காக எதிர்காலத்தில் வாகன இறக்குமதிக்கான பல கட்டுப்பாடு தளர்த்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 150 | 100-140 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 60-80 | 120 |
| தக்காளி | 160 | 160 | 130 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-140 | 200 |
| கோவா | 180 | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 350 | 260 | 220 | 200 | 280 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 160 | 130 | 80 | 200 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 50-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 200-350 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 220 | 80 | 250 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 200 | 130 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 450 | 700 | 400 | 700 | 400 |
| லீக்ஸ் | 320 | 250 | 280 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | 400 | 300 | 350 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 600 | 550 | 450 | 300-700 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 60-80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 1200 | 1000-1350 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 250 | -- | 450 |
| முள்ளங்கி | 140 | 100 | 150 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 300 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 80 | [illegible] |


## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைப்பு



யாழில்



நெல்லியடியில்



முள்ளியவளையில்

(படங்கள் : சிவசாந்தன், மகாலிங்கம், சதீஸ்)

## காரைக்கால் திண்ம கழிவு நிலையத்திற்கு அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் காரைக்கால் திண்ம கழிவு சேகரிக்கும் நிலையத்திற்கு நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையின் திண்மக் கழிவுகளை சேகரிக்கும் நிலையத்தில், கடந்த திங்கட்கிழமை இரவு திடீரென சேகரித்து வைக்கப்பட்டு இருந்த கழிவுகள் தீப்பிடித்து எரிந்துள்ள நிலையில் திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையத்தினால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாகவும் அதனால், அப்பகுதி மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை அடுத்து குறித்த விஜயத்தினை அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளின் பிரசன்னத்துடன் நிலைமைகளை ஆராய்ந்துள்ள நிலையில் அடுத்து வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பில் தீர்வு காண்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிலங்கை...

இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்ப் பொது வேட்பாளர் முறைமைக்கு ஆதரவளித்திருந்தது.

இந்நிலையில் தமிழர் சார்பில் பொது வேட்பாளராக ஒருவரை நியமிப்பது தொடர்பில் பொறுமை காக்குமாறும் தென்னிலங்கை நிலைவரம் மற்றும் தேசியக் கட்சிகள் தேர்தல் விஞ்ஞாபனம் என்பனவற்றை ஆராய்ந்த பின் தீர்மானங்களினை மேற்கொள்ளுமாறும் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நீண்ட வரலாற்றை பார்க்கின்றபோது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வரமுடியும் என்ற நிலைமைகள் உள்ளன.

இந்த நிலையில் தென்னிலங்கையின் தேசியக் கட்சிகள் தற்போது வரையில் உத்தியோகபூர்வமாக தங்களது ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய அறிவிப்புக்களைச் செய்யவில்லை.

அக்கட்சிகள் அவ்விதமான அறிவிப்புக்களை செய்வதற்கு முன்னதாக நாம் எமது நிலைப்பாட்டை முன்வைத்து வீணான குழப்பங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

தென்னிலங்கைத் தலைவர்களில் யார் வேட்பாளர்? அவர்களின் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடு என்ன? அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆழமான கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

அந்த வகையில், நாம் அனைத்து சூழல்களையும் ஆழமாக ஆராய்ந்து எமது கருமங்களை முன்னெடுக்க வேண்டும். அவசரப்பட்டு எந்தவிதமான முடிவுகளையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றார். (ந-7,10)

## அரகலயவின்...

துள்ளார்.

பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்ட இலங்கையின் ஜனநாயகத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் அரகலயவின்போது இலங்கை ஜனாதிபதியொருவர் அடித்துக் கொல்லப்படுவதை தடுப்பதற்காக 2022 ஜூலை மாதம் 12ஆம் திகதி அவர் தப்பியோடுவதற்கு உதவியதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வேறு பல நாடுகளைப் போல இலங்கை ஒருபோதும் சதிப்புரட்சியை எதிர்கொண்டது இல்லை.

உள்நாட்டு யுத்தத்தின்போதுகூட இலங்கை தேர்தல்களை தவறவிட்டதுமில்லை.

நான் எனது ஜனாதிபதி காலத்தில் எதிர்கொண்டது போன்ற நிலைமை இலங்கையில் காணப்பட்டது.

கொழும்பு அதனை எதிர்கொள்வதை நான் விரும்பவில்லை.

இதேவேளை 2009 யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளும் துப்பாக்கிக் குண்டுகளும் இன்றும் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## அரச சொத்துக்...

அறிக்கையில் தேசிய சொத்துக்கள் மற்றும் அரச நிறுவனங்களை விற்கும் அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் இடைக்காலத் தன்மையை சுட்டிக்காட்டிய அவர், அரச சொத்துக்கள் தொடர்பான தீர்மானங்களை வாக்காளர்களிடமிருந்து கிடைக்கும் ஆணைக்கேற்ப தீர்மானிக்க எதிர்கால அரசுக்கு வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை அரச சொத்துக்கள் அல்லது நிறுவனங்களை விற்பனை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று முன்மொழிகின்றேன்.

புதிய அரசாங்கம், அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் நிறுவனங்களை தேர்தலில் அவர்கள் பெற்றுக் கொள்ளும் ஆணைக்கு ஏற்ப கையாள முடியும்.

2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பணியாற்றிய நான் அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆட்சியின்போது விற்பனை செய்யவில்லை. நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். (ந-7,10)

## விடுதலைப்...

என்பதற்கு, ஈழத்தமிழினம்தான் சமகால சாட்சியம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் ஈச்சிலம்பற்று (வெருகல்) பிரதேச மக்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று, நேற்று வெருகல் - சீனன்வெளி பகுதியில், ஈச்சிலம்பற்று பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்கால் வாரத்தை நினைவுகூரும் வகையில், முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற இக்கலந்துரையாடலில், மக்கள் முன் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

சர்வதேசம் பார்த்திருக்க, எங்கள் இனத்தின் மீது வலிந்து புரியப்பட்ட இனப்படுகொலைதான் இந்த நூற்றாண்டின் ஆகப் பெரும் மனிதப் பேரவலம். அந்த அவலத்தின் விளிம்பில் எங்கள் இனத்தின் ஆயுதரீதியான ஆத்மபலத்தை இழந்தபோதும், விடுதலை குறித்த எங்கள் பயணத்தின் வீரியம் இன்னும் குறைந்துவிடவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துவதற்கான உந்துதலை, இறந்த எம் உறவுகளின் ஆத்மாக்களே தருகின்றன என்றார்.

குறித்த கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக்கிளையின் தலைவர் சண்முகம் குகதாசன், ஈச்சிலம்பற்று பிரதேச சபையின்மேனாள் உபதவிசாளர் சங்கர், ஓய்வு நிலை அதிபர் இரத்தின்சிங்கம், மற்றும் மாவட்டக் கிளை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் மேனாள் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## நாகை...

காங்கேசன்துறைக்கும் தமிழகத்தின் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான கப்பல் சேவை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக இருந்தது.

இந்நிலையில் சில சட்டரீதியான அனுமதிகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதங்களாலும் மற்றும் கப்பலின் தாமதமான வருகையாலும் இன்று கப்பல் சேவை இடம்பெறாது எனவும், 17ஆம் திகதி முதல் கப்பல் சேவைகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கப்பல் பயணத்திற்கு பதிவு செய்த பயணிகள் 17ஆம் திகதிக்கு பின்னர் அவர்கள் விரும்பிய திகதிக்கு மாற்றம் செய்து பயணிக்க முடியும். (ந-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.05.12
சீட்டிழுப்பு இலக்கம் 5473
R 5 4 1 7 3 6
அத சம்பத R 1 7 3 6
சீட்டிழுப்பு இலக்கம் 048

தன நிதானய
திகதி - 2024.05.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1503
L 09 17 35 62 L
Double Chance 10222

மெகா பவர்
திகதி 12.05.2024
சீட்டிழுப்பு இலக்கம் 1821
U 02 05 09 29 31
90133

லக்கி 7 VIP
திகதி 2024.05.12
சீட்டிழுப்பு இலக்கம் 0299
Q 7 3 2 2 5 3 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3715
சீட்டிழுப்பு திகதி 12.05.2024
C 07 32 34 53
C 05213

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.12
சீட்டிழுப்பு இலக்கம் 0782
மிதுனம் 11 43 47 54 மிதுனம்
02183 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.05.2024 வெற்றி வாரம் 181 வர்ணம் பழுப்பு
K 6 4 2 4 9 7
18758 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் 22,134,140.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2447 திகதி 12.05.2024 தினம் ஞாயிறு
45 47 48 54 H
69209
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,002,152.80

சனிதா
திகதி 2024.05.12 வெற்றி வாரம் 4608
30 37 49 62 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,588,234.00
61837

சசிரி
வெற்றி வாரம் 476
சீட்டிழுப்பு திகதி 2024.05.12
கபிலம்
03 36 42
06
ரூ. 2,487,400/-
89476

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4159 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.05.12 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 37 47 59 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,709,205.20
990190

கப்ருக
K 27 05 43 56 73
1623 மஞ்சள் 12.05.2024 ஞாயிறு
140604
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 522,240,557.00

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2273
சீட்டிழுப்பு திகதி : 2024.05.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.112,551,328/-
11 39 56 61 L
541828


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(697)

**077 88 62 927**

## மணப்பெண் தேவை

- புலோலி - தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1991, மிருகசீரிடம், Civil Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொடிகாமம், இந்து, கௌரவகுலம், 1980, ஆயிலியம், Lawyer, Business, Australia, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1988, ரேவதி, BSc Chemical Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நல்லூர் - அளவெட்டி, இந்து, கௌரவகுலம், 1985, திருவோணம், Locomotive Engineer, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1989, புனர்பூசம், BSc, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம், 1976, பூசம், A/L, Customer Service, Germany, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருநெல்வேலி - கோப்பாய், இந்து, கௌரவகுலம், 1983, உத்திரட்டாதி, MBBS Doctor, Germany மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1989, மூலம், Graduate, Denmark மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அராலி - பண்டத்தரிப்பு, இந்து, கௌரவகுலம், 1981, உத்தராடம், Computer officer, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1994, உத்திரட்டாதி, Senior IT Analyst, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(737)

-077 539 3728 -077 803 8193

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0352)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (739)

**076 825 7716** (ஆகாஸ்)


## 2ஆம் ஆண்டு நினைவு



அமரர்

**நீக்கிலாப்பிள்ளை பத்திநாதர் [மந்திரி]**

(கே.கே.எஸ், சீமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர், ஓய்வுபெற்ற மின்னியல் இலத்திரனியல் என்ஜினியர்)

தோற்றம் 07.08.1941 | மறைவு 13.05.2022

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (0054)

கனால் வீதி, மாதகல். 077 082 7349 ப.எட்மன்


## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
077 64 212 64 (738)
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (G.G.பொன்னம்பலம் வீதி), பலாலி வீதியில் இருந்து 200 m தூரத்தில் 3ஆவது காணி 27 பரப்பு தோட்டக் காணி 5 அரை வீட்டு அத்திவாரத்துடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை (722)

தொடர்பு கொள்ள வேண்டிய இல.
**076 877 5021**


## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686
076 424 7111 (511)

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.


# மரண அறிவித்தல்



மலர்வு 15.02.1940 | உதிர்வு 11.05.2024

## திருமதி பரமேஸ்வரி பரமநாதன்

### (மாப்பாணர் மிஸ்) (ஓய்வுபெற்ற பொது சுகாதார தாதிய சகோதரி - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ்ப்பாணம்)

*புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வில்வந்தெரு அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பரமநாதன் அவர்கள் கடந்த சனிக்கிழமை 11.05.2024 அன்று இறைபதமடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பாணர் - மாணிக்கம் தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - அபிராமி தம்பதியினரின் மூத்த மருமகளும் கதிர்காமு பரமநாதன் அவர்களின் அன்புத் துணைவியும் பராகஜேந்திரன், றூபேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் லூசியாகிறேஸ்(சுமித்திரா), பிறிசில்லா றஸ்மி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தமிழினி மதுராஞ்சலி, தமிழினியன் மதுராஞ்சன், தமிழ்க்கதிர் அபிராஞ்சன், ஆராதனன், ஹரித்தனா ஆகியோரின் ஆருயிர்ப் பேர்த்தியும் பூமணி, தியாகராசா (அமரர்), சந்திரசேகரம்(அமரர்), கமலாதேவி, சதானந்தம்(அமரர்), இராசேஸ்வரி, சௌந்தேஸ்வரி, பத்மாவதி, வசந்தமாலா ஆகியோரின் பாசம் நிறைந்த மூத்த சகோதரியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.05.2024 திங்கட்கிழமை 12/01, வில்வந்தெரு, அரியாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று பின்னர் மதுராவனம், இல.01, மாப்பாணர் அவனியூ, புத்தூர் கிழக்கில் உள்ள அன்னாரின் பூர்வீக இல்லத்தில் 30 நிமிடங்கள் இளைப்பாறுதலுக்கு வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

பராகஜேந்திரன் - 077 369 9603
றூபேந்திரன் - 077 301 3654

*தகவல் :* குடும்பத்தினர்

(C-0351)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org